818

# "நன்னபிகள் கோமான்"

("இஸ்லாத்தின் ஸ்திரீகளின் உன்னதம்")

ஆசிரியன்

எவ். புருஹானுத்தீன் அவர்களால்

எழுதப்பெற்றது.

---

1933-வது வருடம் ஜூலைமீ 5, 6வ

கொண்டாடப்பெற்ற

"திருநபி ஜனனவிழா மகாநாட்டில்"

அடியக்கமங்கலம்

"மீலாதெ ஷரீப் கமிட்டியாரால்"

வினியோகிக்கப்பெற்றது.

---

இஃது

விஜயபுரம்

...நிதி அச்சியந்திரசாலையில்

...ப்பிக்கப் பெற்றது

Q7:31
N33
120389

# நன்னபிகள் கோமான்.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

திருநபி யிறசூ லுல்லா ஜெனனவை பவங்கொண் டாடிப்
பெருநில மதிலின் சானுய்ப் பிறந்தமன் பதைகட் கெல்லாம்
ஒருதனி முதல்வ னென்னும் ஒளிர்நபி கொண்டு வந்த
ருமறை யொன்றே யுண்மை யாமெனத் தெளிவிப் போமால்
(ஞானபூபதிகள்)

"எல்லா மனிதர்கட்கும் நாம் உம்மை
அருட் பிழம்பாகவே அனுப்பியுள்ளோம்"

(அல்குர்ஆன்)

மூசா (அலை), ஈசா (அலை) இவர்கள் ஒரு குறிப்பிட்ட தேசத்திற்கும், ஒரு குறிப்பிட்ட அளவின் காலத்திற்கும் மட்டும் பிரசாரஞ் செய்யத் தூதராக அனுப்பப்பட்டதுபோலன்றி, சுத்த சத்திய தீனுல் இஸ்லாத்தின் திருத்தூதராம் திரு முஹம்மது (ஸல்) அவர்கள் அனுப்பப்படவில்லை என்பதற்கு பல ஆதார ஆதேயங்களுடைய அத்தாட்சிகள் காணப்படா நிற்கின்றது. மேல் எடுத்தாளப்பட்டிருக்கும் திருமறையின் திருவாக்கியம் **நன்னபிகள் கோமான் முஹம்மது (ஸல்) அவர்கள்** உலகின்கண் தோன்றுவதால் சர்வ உலக நன்மைகளை அடையக்கூடியதா யிருக்கின்றதென்பதை அதிக ஸ்பஷ்டமாய்த்தெளிவுபடுத்துகிறது. பரந்த அறிவுடன், பல்விதமான உலக நூற்களை உட்புகுந்து ஆராய்வோர்

இலௌகிகவாழ்க்கை முன்னேற்றத்திற்கும், மனிதகோடிகளின் ஆத்மார்த்த அபிவிருத்திக்கும் அத்தியாவசியமாய்க் காணப்படும், விசாலமான நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள எழுத்துக்களையோ, அல்லதுபிரசாரத்தையோ அல்லது உரைகளையோ சொல்லிப் போந்த எந்தத் தூதர் அல்லது மஹான்களும் இவ்வுலகின்கண் நிலைபெற்றில்லை என்றும், இத்தகைய முறைகள் சிலது ஸ்திரமான இயற்கைச் சட்டத்துடன் இணங்கப்பட்டும், சில காரண காரியத்திற்கு மதுரமுள்ளதாயுமிருக்கின்றனவென்றும் தெளிவாய்த் தெரிந்துகொள்கிறோம்.

நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களது வாழ்க்கை சொல், செயல் ஆகிய இவைகள் மட்டுமே இத்தகைய அத்தியாவசியங்களை அடையப்பெற முயற்சி எடுக்கின்றது.

மனித கோடிகளின் வாழ்க்கையின் சரித்திரத்தில் இது நிகரற்ற அம்சமாகும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமின்று, அநேக இலௌகீக வைதீகஉபதேசகர்கள், சமூக சீர்திருத்தக்காரர்கள், சட்ட நிபுணர்கள், ஆத்மார்த்தத்தலைவர்கள் ஆகியோர்களால் இந்த கிரஹத்தின் முகத்திலிருந்து தோன்றி மறைந்துள்ளார்கள். இன்னோர்கள் ஒருவரும் இத்தகைய மாறுதல்களை, இம்மையிலும், மதத்தைச் சூழ்ந்துள்ள எல்லைக்குள்ளும் கொண்டுவரவில்லை. சிலர் அவர்களது பிரசாரத்தில் தோல்வியுற்றனர். நன்மையான வெற்றியில் அநேகர் நன்னம்பிக்கையை இழந்தனர். மற்றவர்கள் தங்களது அனுபவங்கள் முழுவதும் வெற்றிபடையும் வரையில் ஜீவித்திருக்கவில்லை. இத்தகையோர்களது நிலைமைகள் இன்னோர்களது அம்சங்களின் அல்லது சிந்தனைகளின்

குறைபாடுகளை வெளிப்படுத்த வில்லையா? மீண்டும் பழைய காலத்தைக் கவனிக்குங்கால், ஏகாந்தமாயிருந்து செய்த சில உபதேசங்களைக் கானகத்திலிருந்தும், சிலது சிகரத்திலிருந்தும், மற்றது ஜனங்களுடைய உல்லாச வாழ்க்கையிலிருந்தும் நாம் காண்கின்றோம்.

திரு நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் பூமியில் ஜீவிக்குங் காலத்து இவர்களது தீரவீரச் கொள்கைகளும், சேவைகளும், மேற்கண்டவர்களது உபதேசத்திற்கு முற்றும் வேற்றுமையாக இருப்பதாகக் காண்கின்றோம். ஏனெனில் எம்பெருமான் (ஸல்) அவர்கள் ஜனங்களூடே உறழ்ந்து வாழ்ந்து, தொண்டாற்றி நேருடன் உபதேசம் புரிந்து, மக்களை உறுதிபடச்செய்து திருப்தியடையும் வண்ணம் செய்து போந்தார்களென்று சரித்திரவாயிலாய் அறிகின்றோம். மேலும் நன்னபிகள் (ஸல்) அவர்களது உபதேசமோ, மானிட வர்க்கத்தினர் அனைவோர்க்கு எல்லாக் காலத்திற்கும், எல்லா வகுப்பாருக்கும் பயன்தரக் கூடியதாய் அமைந்திருக்கிறது. ஏனெனில் அடிப்படையான நோக்கங்களும், அன்னார்களது உபதேசங்களில் பதிந்துகிடக்கும் உயரிய சன்மார்க்க நீதிகளும், சர்வலோக குணுகுணங்களை நடத்தக்கூடியதாயும், வாழ்க்கையின் எல்லா வகைப் படித்தரங்கட்கும், எல்லாவகை நாகரீகத்திட்டத்தின் தேவைகட்குப் பொருத்தமுள்ளதாயு மிருக்கின்றன.

உண்மை இஸ்லாமிய நோக்கங்கள் ஒவ்வொன்றையும் கையாண்டு, அவைகளில் பிரதிபிம்பிக்கும்படி செய்யுங்கள்! மூட நம்பிக்கைகளையும், இஸ்லாத்திற்கு முரணானகொள்கைகளையும் விட்டு வெகுதூரம் அப்புறப்படுத்தப்பட்ட பரந்த அறிவுடன் நீங்கள் ஆராய்வீர்களேல், அவைகள் கடந்து

போன அம்சங்களைப் பரிபூரணமாய் ஆ த ரி க் கி ன் ற தென்பதை நீங்கள் கண்டுகொள்ளாம லிருக்கமாட்டீர்கள். இஸ்லாமிய அறிவு, அல்லது அடிப்படையான கொள்கை களிலோ, சிறிது சம்பந்தமும் நேர்முகமான ஞானமுமில்லாத சில சரித்திராசிரியர்கள் இஸ்லாமல்லாத பிரசாரத்தின் மீதுள்ள பொ ா ரு மை யு ள் ள பொய்க்கூற்றுக்கு ஆளாகுவதற்குக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இத்தகைய சிக்கட்டான நிலைமையிலிருந்து இவர்கள் மீள்வதற்கு வழி இல்லாததாய் உணர்கிறார்கள்.

சில விஷயங்களில் பிரதான கருத்துக்களால் அன்னார் கள் அத்தகைய சூழ்ச்சியில் சிக்கிக்கொள்ள வற்புறுத்தப் படுகிறார்கள். இந்தவித நிபந்தனைகளுடன் முஸ்லிம் உலகம் கருணைசெய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் அதிர்ஷ்ட வசமாகத் தற்கால சமூக எல்லைக்குள் ஏற்பட்ட ஒருவித புத்துணர்ச்சியால் சிலரை முன்னணிக்குக் கொண்டுவரச் செய்து, அறியாமையாய்ப் பிதற்றப்பட்டுப் போந்துள்ள பொறாமையாளர்களின் பொய்க்கூற்றுக்களை வெருட்டி யடித்து உண்மைகளில் கவனத்தை ஈர்த்து, றசூலுல்லா(ஹ்) அவர்களது திருத்தூதுவத்தின் உன்னத லக்ஷணங்களைப் பாராட்டவும் செய்திருக்கிறது. இத்தகைய ஆவேச நிலைமை வருங்காலத்தும் அபிவிருத்தி யடையுமாயின் பொதுவாக உலகிற்கு வாழ்த்துக்கூறல் வேண்டும்.

இந்நூலின் ஆரம்பத்தில் எடுத்தாளப்பட்டிருக்கும் திருமறையின் திருவாக்கியம், மனிதகோடிகளின் நன்மையை யுன்னியே முழுத்தொண்டையும் செய்யுமாறு திருத்தூதர் அவர்கட்கு அனுப்பிய ஆக்ஞையை ஞாபகப்படுத்தப்படுகிற தென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இன்னார்களது தூதால்

ஏற்பட்டிருக்கும் நற்றருணத்தை இழந்துவிட வேண்டா மெனவும் இவர்களது (நபிகள்பெருமான்) உபதேசங்களையும் திருக் குர்ஆனையும் அலக்ஷியம் செய்யவேண்டா மெனவும் உலகக் கண்ணோட்டக்காரர்கட்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறது. இத்தகைய தயாளத்துவம் ஒருதேசத்திற்கோ அல்லது ஒரு காலத்திற்கோ உறுதிப்படுத்தவோ, கட்டுப் பாடு செய்யவோ இயலாதென்பதை இப்போது வெகு ஸ்பஷ்டமாகத் தெரிந்துகொள்கிறோம். ஏனெனில் அஃது அவ்விதம் வெளிப்பட்டிருந்தால் அதனது பிரமாண்டமான நன்மதிப்பையும் லக்ஷணங்களையும் இழந்துவிடுகிறது. ஆத லால் சர்வவுலக கருணை இஸ்லாத்தின் ரூபத்தில், இஸ்லாத் தின் பெயரால் இறுதிநாள் வரையில் பரவி நிற்கவேண்டு மென அல்லா(ஹ்) அறிவித்துள்ளான் ஆகலின் இஸ்லாத்தின் தூதர் உலகின் எக்காலத்திற்கும், எல்லாத்தேசத்தாருக்கும் இறைவனின் பொதுவான கருணையாளராகவே அனுப்பப் பட்டிருக்கிறார்கள் என்பதில் சிறிதும் ஐயப்பாடின்று.

எம்பெருமான் நபிகள்கரீம் (ஸல்) அவர்களது சொந்த குணவிசேஷங்களை நோக்குகையில் மேற்கண்ட திருக் குர்ஆன் திருவாக்கியம் அவைகளுடன் என்ன சம்பந்தம்கொண்டுள்ள தென்பதையும் அவைகள் வார்த்தை யிலும், ரூபத்திலும், எவ்விதம் பதிவிறுத்தப்பட்டிருக்கிற தென்பதையும், நாம் தெரிந்துகொள்ளவேண்டும். நண்பர் கள் எதிரிகள் அறிமுகமும்—அறிமுகமு மில்லாத அனைவோர் களிடம்—இவர்கள் கையாண்டு வந்த முறைகளும் பரம்பரை யான தீராப் பிராணசத்துருக்களிடத்து, எதிரிகளின் கெடுத லான வழிகட்காக இவர்கள் கொண்டுள்ள பாரியக் கவலைக்கும் இவர்களதுமேன்மையான வாஞ்சை பூமியின்உண்மையையும் நிகரற்றதுமான தயாளத்திவத்தின் உயரிய ஒழுக்கமென்றும்

உதாரணஞ்செய்கிறது. மக்கமாநகரைக் கைப்பற்றிய காலத்து, கூடுமான எல்லேவரை தம்மை ஹிம்சித்ததோடு நில்லாது, சுயநாட்டிலிருந்து தம்மைத் தேசபிரஷ்டம் செய்த அம்மக்காவாசிகளை, எமது வள்ளல் திருநபி (ஸல்) அவர்கள் சுயமே மன்னிக்கும் குணத்தால் மன்னித்துவிட்ட உயரிய பரோபகாரத்தன்மையை இலௌகீக வைதீக சரித்திராசிரியர்கள் எடுத்துக்காட்டாமற் போனது வருந்தத்தக்கதாம். முன் சென்ற நபிமார்களின் வாழ்க்கையிலோ, அல்லது பெரிய மஹான்களிடமோ, இத்தகைய நிகழ்ச்சிக்குரிய உதாரணங்கள் உண்டாவென்பதை ஞாபகப்படுத்தி ஆராயும்போது, நூஹ், தாவூது (இவர்கட்கு ஆண்டவனது சாந்தி உண்டாவதாக) இவர்களது உபதேசங்களைச் செவியேற்க மறுத்ததின் காரணமான இச்சிறிய குற்றத்திற்கு அவர்களது ஜனங்களை நிர்மூலப்படுத்தும்படி செய்த பிரார்த்தனையும், மூசா (அலை) அவர்கள் தமது எதிரிகளின் நிலைமையையும், செல்வத்தையும் அழிவுறச் செய்வதற்காகச் செய்த பிரார்த்தனையும், ஈசா (அலை) அவர்கள் பசியோடு அத்தி மரத்தைச் சமீபித்தபோது அம்மரத்தில் பழங்களில்லாத காரணத்தால் செய்யப்பட்ட சாபமும், ஆகிய இவைகளெல்லாம் நமது ஞாபகத்திற்கு வருகிறதென்பதைக் கவனியுங்கள்! மகத்துவமுள்ள எமது நன்னபிகள் கோமான் திரு முஹம்மது (ஸல்) அவர்கட்கும், மேல்சொன்ன நபிமார்களுக்கும் உள்ள பாரிய வித்தியாசத்தைச் சற்று உற்றுநோக்குங்கள்! இவைகளெல்லாம் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளாகவும், எந்த ஆதாரத்தின்மீதும் நிராகரிக்கப்படாதனவாயுமிருக்கின்றன. மேற்சொன்ன குணகுணங்களின் தோற்றத்தில் நமதுநபிகள்பெருமான் (ஸல்) அவர்கள்கஷ்டநிஷ்டூரமான நிலைமையிலும், நெருக்கடியான சமயங்களிலுங்கூட கருணையாளராய் இருந்தார்களென்று இயம்புவதற்கு இதைவிட

வேறு அத்தாட்சிகள் தேவையென்று வாதிப்பது பெரிதும் பொறுத்த மற்ற சம்பிரதாயமாயிருக்கின்றதென்பதை ஈண்டு மீண்டுமோர் விருத்தம் ஆராயுங்கள்! இவர்களது தயாளகுணம் எல்லையற்றதாயும், எவ்வகையிலும், வித்தியாச மின்றியிருப்பதே இதன்பெருமைக்கோர் தனிச்சிறப்பாகும்

உலக மதபோதக உத்தமர் திருநபி முஹம்மது (ஸல் அவர்களது தூது அக்காலத்தியதும் பின் அடுத்து வந்த காலத்தின் ஜனங்கட்காகத் தனது காலத்தில் கொண்டு வரப்பட்டதென்றும், மக்கள் அதனது சட்ட திட்டத்தின் பிரகாரம் ஒழுகி நடந்துவரும் பக்ஷத்தில் இவர்களது தூது தற்கால வருங்காலத்திற்கு உபயோகமாகுமென்று உறுதி கூறப்பட்டிருக்கின்றனவென்றும், இந்தக் கருணை கட்டுக் கடங்கா நன்மையில் பிரதிபிப்பிக்கச்செய்கின்றது. இந்த அருள், உலகத்தாரால் அனுமதிக்கப்பட்டதாயும், இந்த அனுமதியும், சர்வ உலக தூது, வேதம், தொண்டு ஆகியவைகளெல்லாம் எல்லாக் கோலங்களிலும், சித்திர வெட்டு செய்யப்பட்டிருப்பதாக காணக்கிடக்கிறது.

## மானிடரின் ரக்ஷகர்.

நபிகள் பெருமான் (ஸல்) அவர்கள் மானிடரின் ரக்ஷக ராவார். மக்களின் நன்மைக்காகவும், சித்திக்காகவும், இறைவனின் கருணை சொரியக்கூடும். அவ்வண்ணமே இலௌகீக வைதீக அம்சங்களில் இவைகள் இஸ்லாத்தின் திருத்தூதர் அவர்கள் நிரூபிக்கின்றார்கள். முன் சொன்ன விஷயத்தில் விசுவ சகோதரத்வத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூது பெண்கள், அடிமைகளின் உன்னதம் பெற்றோ ரற்றோர் பால் செலுத்தும் முன் மாதிரியான கருணை

ஒவ்வொருவரின் வாழக்கையிலும் பொறுத்தமாகவும், அவசியமாகவும், வைதீக இலௌகீக உலகத்தில் செய்யப் பட்ட சட்ட நிருபணமும் குடி முதலிய மற்ற தீயசமுதாயச் செயல்களை முழுதும் அழித்தலும், பொதுவாக எல்லா மக்களின் சமுதாய முன்னேற்றத்திற்குச் செய்யப்பெற்ற எல்லையில்லாப் பிரயோஜனங்கள் ஆகிய இவைகளெல்லாம் அளவற்ற ஆசீர்வாதங்களா யிருக்கின்றன. இ த ன து உண்மைநிலையைப் பொறுமையாளர்களின் கூற்றுக்கள் அபூர்வமாய் உணரச்செய்கிறது. ஏனெனில், அவர்களது எண்ணங்கள் பூராவும் மதத்தின் தப்பான நோக்கத்தையே கொண்டிருக்கிறது. பொதுவாக அவர்கள் உலகிற்குச்செய்து போந்துள்ள கொடையை அறியவும், பாராட்டவும் வேண்டு மானால், இஸ்லாத்தின் நெருங்கிய அறிவும், அதனது உயரிய கொள்கைகளும் அவசியம் வேண்டற்பாலது. இந்த அஸ்தி வாரத்தை விட்டுவிட்டபோது ஒருவித ஆராய்ச்சியும், எந்த வகை உண்மையுள்ள பலனை ஒப்புக்கொள்ளச் செய்யாது நபிகள் பெருமான் (ஸல்) அவர்களது தூதையும், லக்ஷணங் களையும் இஃது பிரதிநிதித்வம் செய்கின்றன. இவர்களது சமயத்தை சிறுபோழ்து நோக்குவோம். இம்மதத்தை "இஸ்லாம்" என்று அழைக்கப்படுகிறது. இவ்வார்த்தையின் உபதானத்தில், இவர்களது சமயத்தின் இயல்பு அனைத்தை யும் வெளிப்படுத்துகிறது. இ வ் வ ர பி வார்த்தைக்குச் "**சம்பூரண சமாதானம்**" என்று பொருள்படும். இஃது அளவற்ற பரந்த அம்சமாகும். ஏனெனில் இப்பூலோக சம்பந்தாசம்பந்தப் பட்டவரையில் சமாதானம், ஒவ்வொரு ஜீவகோடிகளும் அடையக்கூடிய உயரிய மிக மதிப்புள்ள அம்சமாயிருக்கிறது. என்னே! இஸ்லாத்தின் மேன்மை யானநோக்கம்! கொடைகளின் எல்லைக்குள் இவ்வார்த்தையே இறுதியானதென்றால் மிகையாகுமா? இந்நோக்கத்தைக்

கைப்பற்றுவான்வேண்டியே, உலகம், வாழ்க்கையையும் தேசத்தையும் அர்ப்பணம்செய்ய எவ்வுலகத்திலும் முயற்சி நடந்துவருகிறது. சமாதானத்தில் பூராவான கருத்து இஸ்லாத்தின் பார்வைக்கு அப்பாலே இருக்கிறது. ஆழ்ந்த ஆலோசனைகட்கு ஈங்கு இஃது ஆதாரமாயிருக்கிறது. இற்றைக்குச் சற்றேறக்குறையப் பதினான்கு நூற்றாண்டு கட்கு முன்பு, மதத்தின்ரூபத்தில் சமாதானத்தைக்கொண்டு வந்த நமது **நன்னபிகள் கோமான் திருநபி முஹம்மது (ஸல்) அவர்கள்,** மனித கோடிகளின் ரக்ஷகராவார் என்பதை மேற்கண்ட பட்சபாதமற்ற ஆலோசனைகள் ஒப்புக்கொள்கிறது.

பிரபஞ்ச வட்டத்தை நாம் தற்போது சுருக்கமாக ஆராய்ந்தோம். வைதீக உலகத்திற்கு நாம் தற்போது செல்வோம். எமது நபிகள் கோமான் திருநபி முஹம்மது (ஸல்) அவர்களால் உண்மையான புனருத்தாரணம் செய்யப்பட்டதென்று எல்லோராலும் அங்கீகரிக்கப் பட்டதாகும். ஈசா(அலை) அவர்கட்குப்பின் சற்றேறக்குறைய 600 ஆண்டுகள் வரையில் எந்த மார்க்க உபதேசர்களும் எந்த பாகத்திலும் தோன்றவில்லை என்பது சரித்திரச்சான்றாகும். அஃதினால், இதனது ஜனங்கள் அஞ்ஞான இருளிலும், மிலேச்சத்தன்மையிலும், மாக்கள் தன்மையிலும் ஆழ்ந்து விட்டார்களென்பது சரித்திரம் உணர்த்தக்கூடிய விஷய மாகும். வைதீகத்தின்உண்மையான தூது நிறுத்தப்பட்டது. ஆத்மா பசி, அநேகஜனங்களை நாஸ்தீகத்திலும், லோகாதாயக் கொள்கைகளிலும் மூழ்கிவிடச் செய்துவிட்டது. முன் னுள்ள வேதங்களும், இதிகாசங்களும், மாற்றப்பட்டு புரட்டப்பட்டு போய்விட்டன. எல்லாவகை மனித சீர்திருத் தங்களும் வீழ்ச்சியடைந்தன.

இந்நிலைமையில் உலகமதபோதக உத்தமர் **திருநபி முஹம்மது (ஸல்) அவர்கள், கி. பி. 570ல் அரேபியாவில்தோன்றி கி. பி. 610-ல் இறைவனது திருத்தூதை ஆரம்பித்தார்கள்.** அவர்களது உபதேசத்தின் மூலம் அவர்கள் சொந்த மக்களையும், தனது தேசத்தார்களையும் இஸ்லாத்தின் பக்கல் கொண்டுவந்தார்கள். அநேக காலங்களாக விக்ரக வணக்கத்திற்குத் தலைசாய்த்திருந்த மக்களுக்கிடையில், விக்ரஹ வணக்கத்தை அறவே நிர்மூலம் செய்து அதனது வாசனையில்லாமலே செய்துவிட்டது மகா ஆச்சரியமான காரியமன்றோ? மிருகத்தன்மையும், அறியாமையும் குடிகொண்டு, மூடபக்தியினால் பூரணமாய் வீழ்த்தப்பட்டிருந்த ஜனங்களை, அறிவுள்ளவர்களாகவும், சன்மார்க்கமுள்ளவர்களாகவும் திகழும்படி நபிகள் பெருமான் (ஸல்) செய்துவிட்டார்கள். தேசம், வகுப்பு பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வந்த மக்களை ஒன்றுபடச்செய்து அறிவையும், கலைஞானத்தையும் உறுதியாய்க் கைப்பற்றும்படியான முன்னேற்றமும் அடையச்செய்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தோற்றத்திற்கு முன் அரேபியா மக்கள் அந்தகாரத்தில் வீழ்ந்து கிடந்தார்கள். இவர்கள் இப்போது அல்லா(ஹ்)வின் உண்மையான விசுவாச அடியார்களாய்த் திகழ்ந்துவருகிறார்கள்.

இப்புதிய ஜோதி அரேபியாவிலும் அரேபியாவை அடுத்த பல பாகங்களிலும் பரவ ஆரம்பித்தன. நேர்முகமாகவோ, அல்லது மறைமுகமாகவோ, இஸ்லாம் உலகிற்குப் புகட்டி, ஓர் வாலிபஸ்தாபனமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வுதாரணங்கள் அனைத்தும் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு அறிவற்ற மனிதன், இலௌகீக உலகின் சமாதானத்திற்கும், அபிவிருத்திக்கும் செய்து போந்துள்ள பாரிய உதவியை, அங்கீகரிக்க ஒருபோழ்தும்

மறுக்கமாட்டானென்பது உறுதியாம். எல்லோர்கள்பாலும் செலுத்தக்கூடிய பொதுவான கருணை, நபிகள் நாயகத்தின் பால் பரிபூரணமாய் அமைந்திருக்கிறது. எல்லாவகை சுயநல நன்மைகளிலிருந்து அவர்கள் ஒதுங்கியே இருந்தார்கள். என்னென்ன பேசுகிறார்களோ, எதுவெல்லாம் செய்கிறார்களோ, அதுவெல்லாம் ஹிருதயத்திலிருந்தும் பிரியம், சுயம். ஆலோசனையிலிருந்துமே, நேரே தொடர்ந்து வந்தன. கற்றோரும், மற்றோரும், முதியோரும் இளையோரும் கிரகித்துக்கொள்ளக்கூடிய வண்ணம் இனிய விளங்கக்கூடிய பாஷையிலேயே நபிகள் பெருமான் பேசுவார்கள். உணரவும், திருப்தியடையும் வண்ணமும் அவர்கள் உபதேசம் புரிவார்கள். வயது, நிறம், நிலைமை பேதமில்லாது யாவருடனும் ஒன்றாகவே இருந்து வந்தார்கள் மனித இயல்பிற்கு அதிகப்பட வல்லமை தமக்கு உண்டென்று அவர்கள் ஒருபோழ்தும் சொல்லிக்கொண்டதில்லை என்று பிரத்தியட்சமாய் சரித்திரம் கூறுகிறது. ஆனால் இதற்கு எதிரிடையாய், ஏனையோர்களைப்போல் தாமும் ஒரு சாதாரண மனிதனென்றே அடிக்கடி அவர்கள் கூறிவந்திருக்கின்றார்கள். இவர்கட்கு இறைவனின் தெய்வ வெளிப்பாடு வெளிவருவதற்கு முன்பே, அவர்கள் உண்மையையும், சத்தியத்தையும், நிலை நிறுத்தப்பட்டிருந்ததாகச் சரித்திர வாயிலாக அறிகிறோம். இத்தகைய சத்தியத் தத்துவத்தின் பலனாய், தனது ஜனங்களிடமிருந்து "நன்னம்பிக்கைக்குரியவர்" (அல் அமீன்) என்னும் கௌரவப்பட்டத்தை அடையப்பெற்றார்கள். நமது சத்திய உத்தம நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஜீவியம் முழுதும் ஒருபோழ்தும் சுய நலத்திற்குங்கூட "பொய்" என்னும் சொல்லை செப்பப்படவில்லை என்று இவர்கள் பால் அபிப்ராயபேதம் கொண்டுள்ள

சரித்திராசிரியர்களுங்கூடஒப்புக்கொண்டிருக்கிறார்கள் வாழ்க்கையின் எல்லாவகைச் சிங்காரிப்பும் அவர்கட்கு கவர்ச்சி கொடுக்கவில்லை. இவர்கள் மற்றவர்களை ஏமாற்றினவர்களாகவோ, அல்லது மற்றவர்கள் இவர்களை ஏமாற்றினவர்களாகவோ இல்லை என்பது நீங்கள் சரித்திரவாயிலாய் அறிந்தவிஷயமேயாகும். முஸ்லிம் அல்லாதவர்களால், இவர்கட்கு தேசத்தின் அரசாட்சியைத் தருவதாகக் கூறப்பட்ட நிகழ்ச்சியையும், அவர்கள் அதற்கு **“வலது கையில் சூரியனையும், இடது கையில் சந்திரனையும் கொண்டு வந்து தந்தபோதிலும், எனது இஸ்லாமிய பிரசாரத்தை விடேன்”** என்று அழுத்தந் திருத்தமாய்க் கூறிய பதில், அவர்கள் இறைவனது ஆக்ஞையினிடத்தும், உண்மையான அவர்களது கடமையினிடத்தும் அவர்கள் (நபிகள் நாயகம்) கொண்டுள்ள மட்டற்ற பக்தியைத் தெற்றென எடுத்துக்காட்டுகிறதன்றோ?

நமது சத்திய உத்தமத் திருநபி அவர்களது அதிக கம்பீரமான உண்மையையும், உயரிய குணாதிசயங்களையும், திருக் குர்ஆன் வாக்கியங்கள் அதிகம் உறுதிப்படுத்துகிறது. அவர்கள் சிறந்த முன்மாதிரியாகவும், சிறப்பின் உயர்ந்த மாதிரியாயும் இருந்தார்கள்; அவர்களது வார்த்தைகளும், செய்கைகளும், திருக் குர்ஆன் மயமாகவே இருக்கிறது என்று கதிஜாபிராட்டியார் அவர்கள் கூறியதை ஊன்றி உற்று நோக்குங்கள்! நபிகள்கரீம் (ஸல்) அவர்கள் எல்லா வகை ஸ்தானத்திற்கும், பிரதி பிம்பமாய்ப் பிரகாசிக்கிறார்களென்றால் மிகையாகா வீரன், சந்நியாசி, குடியானவன், அரசன் ஆகிய கீழ் ஜாதி மேல் ஜாதி வரையிலுள்ள எல்லா வகை அந்தஸ்து ஜனங்களின் ஜீவியத்தின் எல்லாவகை அம்சங்களுக்கும் வழிகாட்டியாயிருக்கிறார்கள்.

ஏனைய சமுதாயத் தலைவர்களைப்போலல்லாது, நமது நபிகள்பெருமான் (ஸல்) அவர்கள் எல்லாவகைப் படித்தரங்களிலும் அதிகம் அநுபவம் பெற்றவர்களாயும் இருந்து வந்தார்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைமையின் நெருங்கிய அறிவை அடைவதில் இஃது உதவி செய்தது. இந்த வகை அரசாட்சிகளைத் தனது வாழ்க்கையின் உதாரணத்தால் நமக்கு வள்ளற்பெருமான் (ஸல்) தந்து போந்துள்ளார்களென்பதை மதஆசாரியுங்கூட ஒப்புக் கொள்ளப் பின்வாங்கவில்லை. உலக முழுவதற்கும், திருநபி அவர்கள் ஓர் கருணையாளராவார்கள். ஜனங்களின் நன்மைக்காகவே சதாகாலமும் பெருமானவர்கள் பிரார்த்தித்து வந்தார்கள். ஏனையோர்களின் உணர்ச்சிகளை இறுதி எல்லை வரையில் கௌரவப்படுத்தினார்கள்.

யுத்தகளத்திலும், பகைவர்களால் எதிர்க்கப்பட்ட போதும், நபிகள்பெருமான் (ஸல்) அவர்களது தைரியம், முறியடிக்கப்பட்டதற்கு நிகரற்ற கருணையையே சொரிந்திருக்கின்றது. எல்லாவகை நிலைமைகளிலும், எல்லாவகை சந்தர்ப்பங்களிலும், நியாயம், சமத்துவமாகவே நடந்து கொண்டார்களென்பது சரித்திரச்சான்றான விஷயமாகும். அவர்களது பொறுமையும், சகிப்புத்தன்மையும் ஒப்பற்றதானதாகும். கருணைவடிவமாகவே இஸ்லாத்தின் கொள்கைகள் அனைத்தும் பரவி நிற்கின்றன. உலக சமயங்களுள் இஸ்லாமே இறுதி மதமென்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. முஹம்மது நபி (ஸல்) அவர்கட்கு முன்சென்ற நபிமார்களின் மார்க்கமாகும் இஸ்லாம். ஆதம் (அலை) நூஹ் (அலை) இபுராஹீம் (அலை) மூசா (அலை) ஈசா (அலை) ஆகிய நபிமார்களெல்லாம் இச்சாந்தி மார்க்கத்தைக் கடைபிடித்து பிரசாரம் செய்து போந்தார்கள். திருமறையில் கூறப்பட்டுள்ளபடி

மேலே நாம் ஆராய்ந்து பார்த்ததுபோல், ஒவ்வொரு தேச முமம், ஒவ்வொரு எச்சரிக்கையாளரை அடையப்பெற்றிருப் பதாக அறிந்துகொள்கிறோம். இந்த எச்சரிக்கையாளரின் நிலைமை, எல்லாவிடங்களிலும், இஸ்லாமிய தத்துவம் போதிக்கப்பட்டிருப்பதாகவே உறுதிப்படுத்தப்படுகிறது. மக்களின் இடையீடு பல்வகைத் தோற்றத்தை உண்டாக்கிய தால் புனருத்தாரணம் தவிர்க்க முடியாததாயிருக்கிறது. அடுத்துவரும் விஷயங்களில் விளக்கப்பட்ட கருத்துக்களைப் புதுப்பிக்க நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் இப்பூவுலகில் தோன்றினார்கள். அவர்கள் இறுதிப் பிரதிநிதியாகவும், இவ்வகை முறையைப் புதிப்பித்தவராகவும் இருந்துவந்தார் கள். அவர்கள் உலகின்கண் அவதாரஞ்செய்யப்பட்டவுடன் எல்லாம் பரிபூரணஞ்செய்யப்பட்டன. புதிதாகவும், ஸ்திர மான உணர்ச்சியையும் அளித்து அவைகளைத்திடமான அஸ்திவாரத்தின் மீது நிலைநாட்டினார்கள். இவ்வண்ணம் அவசியமான முடிவுகளை எல்லாம் புகுத்தி சம்பூரணமாக்கித் தந்தார்கள்.

நபிகள் கோமான் திரு முஹம்மது (ஸல்) அவர்கள் ஓர் சாதுவான தூதராகவும், தத்துவ ஞானியாயும், சாஸ்திர விற்பன்னராயும் வல்லமையாளராயும், வியாபாரியாயும், எகாந்தியாயும், ராஜதந்திரியாயும், அதிபதியாயும், இல்வாழ்க்கையாளராயும் இருந்து, செவ்வனே வாழ்க்கையை நடாத்தி வெற்றிவாகை சூடிப்போந்தார்கள் என்பது சரித் திரம் சாற்றும் சான்றாகும். ஏககாலத்தில் இல்வாழ்க்கை யிலே புகுந்து முழுதும் ஈடுபட்டுக்கொண்டே ஓர் இறைவனின் இணையில்லாத் தூதுவத்தின் நடைமுறைகளை எல்லாம் கையாண்டுவந்தார்களென்பது உலக சரித்திரத்தில் பதிந்துகிடக்கும் உண்மையான விஷயமாகும். அவர்களது

வாழ்க்கையிலுள்ள மேற்கண்ட ஸ்திரமான அம்சங்கள் அனைத்தும் பொருந்திக்கொள்ளக்கூடிய வண்ணமாகவே அத்தகைய உன்னத நிலைமைகளை அவர்கட்கு ஆண்டவன் தந்ததனால் வாழ்க்கையின் எல்லாவகைப் படித்தரங்களில் தேவைகளையும் அடைய நியாயமாய் அரசுபுரிந்து வந்தார் கள். இத்தகைய கூட்டுவாழ்க்கையை இதர தலைவர்கள் என்போர்களிடம் காண்பது அரிதன்றோ! ஏனெனில் ஈசா (அலை) அவர்கள் பிரமச்சாரியாகவே இருந்து தனது ஜனங் களின் தினசரி வாழ்க்கையை விட்டு விலகியே இருந்துவர விரும்பினதாகச் சரித்திரம் கூறுகிறது. மேலும் அவர்க ளது தூது பரிபூரணம் அடைவதற்கு முன்பே அவர்கள் காலகதியடைந்து விட்டார்கள். புத்தர், வீட்டைவிட்டுச் சென்று இல்லற வாழ்க்கையை வெறுத்தார். இவரது உபதேசங்கள் ஏகாந்தமான வாழ்க்கையையே பெரிதும் விரும்புகிறது. பெரும்பாலும், கானகங்களிலும், சிகரங் களிலுமே வாழ்க்கையை நடாத்திப்போந்தார். கான்பூஸ்யஸ் என்பவர் பழக்க வழக்கத்திற்கு விரோதமாகவே பிரசாரம் புரிந்து, புத்தர் கொள்கையை ஆதரித்தவராய் நின்றார். மூசா (அலை) அவர்களது ஏற்பாடுகள் எல்லாவகை அம்சங் களையும், நிலைமைகளையும் பொருத்தமாக்குவதற்கு மிகவும் போதாதாயிருந்தது.

மேற்கண்ட உண்மைகளின் காரணத்தால் ஒவ்வொரு வாழ்க்கையின் படித்தரங்களையும், மேற்சொன்ன பெரியார் களால் உணரச்செய்யவும், அவைகளைச் சட்டவாயிலாய் நிர்ணயிக்கவும் எதிர்பார்க்கமுடியாது. உலகுக்குச் சன் மார்க்க நீதிகளையும், ஹிதோபதேசங்களையும், சந்நியாசி முதல் உயரிய சன்மார்க்கப் பெரியார் வரையிலுள்ள நிலைமை களிலிருந்து முன்னேற செய்வதற்குள்ள படித்தரங்கள்

அனைத்தையும், கையாண்டு தற்காப்புக்காகக்கொண்டு அரசு புரியும் நாகரீக வேட்கையின் திட்டங்களைப் பொருத்தஞ் செய்யவும், கனப்படுத்தவும். நபிகள்பெருமான் (ஸல்) அவர்களது வாழ்க்கை தோற்றத்தருகிறது. மனிதன் நடைமுறைகளின் எல்லாப் பிரிவுகளையும், கவர்ந்து மக்களின் எல்லாத்தத்துவத்தையும், உற்பத்திசெய்வதற்காக வேண்டற்பாலதான கடமைகளையும் அவைகள் தருகின்றன சமீபகாலப் புத்துணர்ச்சி உண்மையை நாடுவதில் வேட்கையை உணர்த்திவருவதாலும், இஸ்லாத்தால் வரையறுக்கப்பட்ட அடிப்படையான கொள்கைகளின் பால் செல்லும் அறிகுறிகள் காணப்படுவதாலும், இதனது திருநபி அவர்கள் தம்மை வருங்கால உலகம் முழுதும் "**பெரிய சன்மார்க்க உபதேசகர்**" என்று புகழப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கருணாநிதி (பில்டிங்ஸ்)பிரஸ், விஜயபுரம். 33 kns

வெளிவந்து விட்டது!        வெளிவந்துவிட்டது!

# இஸ்லாத்தில் ஸ்திரீகளின் உன்னதம்.

இஸ்லாமிய பெண் மணிகளின் உன்னத உரிமைகளையும் சமத்துவக்கொள்கைகளையும், பலமத பெண்களின் நிலைமையோடு சீர்தூக்கி விளக்கிக்காட்டப்பட்டிருக்கும் இத்தகைய அறிய நூல் இதுபரியந்தம் நந்தாய்மொழியில் வெளிவரவில்லை என்பதை இதை நோக்குவோர் அறியக்கூடிய விஷயமேயாகும். பல பேரறிஞர்களால் பெரிதும் போற்றப்பெற்ற நூலாகும். தக்க ஆதார ஆதேயங்களுடன் வெகுதெளிவாய் இனிய செந்தமிழ் மொழியில் எழுதப்பட்டிருப்பதே இதனதுத் தனிப்பெருமையை உணர்த்தக்கூடியதாகும். அனைவோரும் வாங்கி வாசியுங்கள்.

விலை அணா 3. மூன்றரை அணா தபால்வில்லை அனுப்பினுல் இந்நூலின் ஆசிரியரிடம் அடையப்பெறலாம்.